STC.No. 1190-2023
நாள் 02.03.2026.
D.W.2 - (கஸ்தூரி )
புகார்தாரர் ஆஜர். எதிரி ஆஜர்.
புகார்தாரர் தரப்பில் **குறுக்கு விசாரணை**

எனக்கு இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்ற அழைப்பாணை வரவில்லை என்றால் சரி. இந்த வழக்கு விவரம் எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் இந்த வழக்கின் எதிரி என் அக்கா இராமலட்சுமியின் மருமகன் ஆவார் ,அவர் அழைத்து நான் சாட்சியம் அளிக்க வந்தேன். புகார்தாரர் எதிரிக்கு எதிராக ஸ்ரீவில்லிபுத்தூர் மாவட்ட நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.115/2024 தாக்கல் செய்துள்ள விவரம் எனக்குத் தெரியும் என்றால் எனக்குத் தெரியும் புகார்தாரரிடம் எதிரி கடன் வாங்கவில்லை. புகார்தாரர் எனக்கு எதிராக ஸ்ரீவில்லிபுத்தூர் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.243/2024 தாக்கல் செய்துள்ளார் என்றால் ஆம். புகார்தாரரிடம் நான் எந்த கடனும் வாங்கவில்லை. அந்த வழக்கில் நான் வழக்கறிஞர் மூலமாக ஆஜராகி எதிர் உரை தாக்கல் செய்து அந்த வழக்கை எதிர்த்து நடத்தி வருகிறேன் என்றால் ஆம். அசல் வழக்கு எண்.243/2024 வழக்கு விவரங்கள் முழுவதும் எனக்குத் தெரியும் என்றால் ஆம். அந்த வழக்கில் எதிர் வழக்குரை தாக்கல் செய்ய என் வழக்கறிஞருக்கு நான் தான் விவரம் சொன்னேன்.

எ.சா.ஆ.9 பக்கம் 3 பத்தி 6-ல் "இந்த பிரதிவாதியின் சகோதரர் பாரதி இந்த வாதியிடம் 2017-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் ரூ.5,00,000/- கடனாக கேட்டிருந்தார். மை தொகையை பாரதிக்கு கடனாக கொடுப்பதற்க இந்த பிரதிவாதியும் சூரிட்டி கொடுத்தால் கடன் தருகிறேன் என்று கூறியுள்ளார். அதனால் இந்த பிரதிவாதி வாதிக்கு Surety கொடுக்க ஒப்புக்கொண்டுள்ளார். அதன் படி இந்த பிரதிவாதி கடந்த 2017 ஏப்ரல் மாதம் வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க தேதி குறிப்பிடப்படாமலும், மற்ற சங்கதிகளை எழுதாம்லும் ஒரு கடனுறுதிச்சீட்டில் கையொப்பம் செய்து வாதிக்கு செக்யூரிட்டியாக கொடுத்துள்ளார்" என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு பாரதி என குறிப்பிட்டது இந்த வழக்கின் எதிரி தான் அவர் எனக்கு உறவுமுறையில் தம்பி ஆவார்.

மேற்படி எ.சா.ஆ.9 பதில் உரைக்கு முரணாக எனது முதல் விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. என் முதல் விசாரணை என் அக்கா வாங்கிய கடனுக்காக செக்யூரிட்டி கொடுத்ததாகவும் எ.சா.ஆ.9-ல் எதிரி வாங்கிய கடனிற்காக செக்யூரிட்டிக்காக கொடுத்ததாகவும் முன்னுக்கும் பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் புகார்தாரர் மகள் சுபஸ்ரீயிடம் ரூ.5,00,000/- தனிப்பட்ட கடன் வாங்கியிருந்தேன் என்றாலும் அந்த கடனை திருப்பிச் செலுத்தும் வகையில் எ.சா.ஆ.8-யில் கண்ட தொகை 17.04.2021 அன்று செலுத்தினேன் என்றாலும் சரியல்ல நான் புகார்தாரரிடமும் அவர் மகளிடமும் எந்த கடனும் வாங்கவில்லை என் அக்கா வாங்கிய கடனை புகார்தாரர் வருமான வரி பிரச்சனை வரும் என்பதால் அவர் மகள் கணக்கில் செலுத்த சொன்னதால் அவர் மகள் கணக்கில் செலுத்தினேன். நான் சொல்வது போல் என் அக்காவின் கடனிற்காக சுபஸ்ரீயிடம் பணம் செலுத்தவில்லை என்றாலும் நான் சுபஸ்ரீயிடம் தனிப்பட்ட முறையில் வாங்கிய கடனைத்தான் திரும்ப செலுத்தினேன் என்றாலும் சரியல்ல.

நான் புகார்தாரரிடம் வாங்கிய கடனும், சுபஸ்ரீயிடம் வாங்கிய கடனும் தனித்தனி கடன்கள் என்றாலும் ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லை என்றாலும் சரியல்ல. நான் புகார்தாரரிடம் வாங்கிய கடன் ரூ.3,00,000/-த்தை திரும்ப செலுத்ததால் அசல் வழக்கு

(K.KASTHURI)

எண்.243/2024 தாக்கல் செய்துள்ளார் என்றாலும் நான் அதனை மோசடி செய்யும் எண்ணத்தில் எதிரிக்கு ஆதரவாகஇந்த வழக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான், எதிரியும் புகார்தாரரிடம் தனித்தனியாக வாங்கிய கடனை திரும்ப செலுத்ததால் எங்களுக்கு எதிராக புகார்தாரர் தனித்தனி உரிமையியல் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் வழக்குகள் தாக்கல் செய்துள்ளார் நானோ, எதிரியோ புகார்தாரரிடம் எந்த கடனும் வாங்கவில்லை. எதிரி புகார்தாரரிடம் வாங்கிய புரோநோட்டு கடனை திருப்பிச் செலுத்த தாவா காசோலை வழங்கியுள்ளார் என்றாலும் அந்த காசோலை திருப்பப்பட்டதால் எதிரிக்கு எதிராக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

(K. Kasthuri)

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

2/3/24

நீதித்துறை விரைவு நடுவர்,
திருவில்லிபுத்தூர்.